# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 19 புதன்கிழமை 03.07.2024 கதிர் 289







# ஆசிரியர்கள் எதிர்கால சந்ததியினருக்காக தம்மை அர்ப்பணிக்க வேண்டும் பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது!

## அலரி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**ஆசிரியர் தொழிலில் பிரவேசிக்கும் அனைவரும் எதிர்கால சந்ததியினருக்காக தமது சேவைகளை அர்ப்பணிக்க வேண்டுமெனவும் ஒழுக்கமின்றி ஒரு நாட்டில் கல்வியை பேண முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்**

**கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான நியமனங்கள் வழங்குதல், பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இன்று அலரி மாளிகையில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

2➤



## சம்பந்தனின் பூதவுடலுக்கு நாடாளுமன்றில் அஞ்சலி



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனின் பூதவுடல் இன்று பிற்பகல் 2.30 மணியிலிருந்து மாலை 4 மணி வரை நாடாளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அன்னாரது பூதவுடலுக்குப் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது புகழுடல் நாளை வியாழக்கிழமை மாலை திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது.

2➤

## தேர்தலொன்று அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் சட்டம் இன்னும் அமுலிலேயே உள்ளது!

### மீறுவது தண்டனைக்குரிய குற்றம் என்கிறது தேர்தல் ஆணைக்குழு




தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள காலகட்டம் என்பதால் அனைத்து அரசியல் கட்சிகளும் தன்னால் வெளியிடப்பட்டுள்ள பணிப்புரைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு அமைய செயற்படுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று (02) கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு இதுவரை முடிவடையாததால் அதற்கான தேர்தல் சட்டம் அமலில் உள்ளதால் கட்சிகள், வேட்பாளர்கள் தமது பிரச்சார நோக்கத்தைக் கொண்டு அரச பொதுச் சொத்தைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தல், பதவி உயர்வு வழங்குதல், அரச வேலைவாய்ப்பு வழங்குதல், இடமாற்றம் வழங்குதல்போன்றவற்றை இடைநிறுத்த உத்தரவு தேர்தல் ஆணைக்குழுவிற்கு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடும்

2➤

## கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு 3 மாதங்கள் விடுமுறை வழங்க முடிவு!



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு நாடாளுமன்றத்தினால் 3 மாதங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் நாடாளுமன்றம் கூடிய வேளை எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்லவினால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் விடுமுறைக்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு இன்று முதல் மூன்று மாதங்களுக்கு விடுமுறையளிக்குமாறு அவர் முன்மொழிந்தார்.

இதனைத் தமிழ்த் தேசிய

2➤

## யாழ்ப்பாணத்தில் நாளை தந்தை செல்வா கலையரங்கில் சம்பந்தனுக்கு அஞ்சலி

இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் மூத்த தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனது பூதவுடல் யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. நாளை புதன்கிழமை (04) காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை மறைந்த தலைவர் சம்பந்தனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்த முடியும் கட்சியினர் அறிவித்துள்ளனர். சம்பந்தனின் இறுதிக்கிரியை எதிர வரும் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது. (05)

## களுபோவிலை போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் இனங்காணப்படாத நிலையில் 16 சடலங்கள் குவிந்துள்ளனவாம்

### 6 மாதங்கள் கடந்தும் சடலங்களை பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை

தெற்கு கொழும்பு களுபோவிலை போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் 6 மாதங்களுக்கு மேலாக இனங்காணப்படாத 16 சடலங்கள் குவிந்து கிடப்பதாகவும், இதன் காரணமாக நாளாந்தம் வரும் சடலங்களை பதப்படுத்தி வைப்பதில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் களுபோவில போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி பாரிந்த கொட்டுகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் களுபோவில வைத்தியசாலை பொலிஸார் பலதடவைகள் அவ்வவ் பொலிஸ் நிலை யங்களுக்கு அறிவித்துள்ள போதிலும் இதுவரை மேற்படி சடலங்களை பொறுப்பேற்க உறவினர்கள் எவரும் முன்வரவில்லை எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார். இதன் காரணமாக, பிரேத அறைக்கு புதிதாக கொண்டு வரப்படுகின்ற மற்ற சடலங்களை வைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. குறித்த சடலங்கள் கொ/ஹவல, மிரிஹான, கிருலப்பனை, மொரட்டுமுல்ல, இங்கிரிய, மஹரகம, மருதானை, பிலி யந்தலை,வாத்துவ, எகொடஉயன மற்றும் கொட்டாவ ஆகிய பிரதேச பொலிஸ் நிலை யங்களினால் மேற்படி பிரேத அறைக்கு ஒப்படைக்கப்பட்டவை எனவும் மரண விசாரணை அதிகாரி பாரிந்த கொட்டுகொட மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-08)

## தேர்தலன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேட்புமனுக்களை சமர்ப்பித்த வேட்பாளர்களை கட்சிகள் அல்லது வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில் நடந்து கொள்ளுதல் அரசியலமைப்பு, தேர்தல் சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கையின் விதிகளை மீறும் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெஜ-07)

## கஜேந்திரகுமார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் வழிமொழிந்தார்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு நாடாளுமன்றத்தினால் 3 மாதங்களுக்கு விடுமுறை வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் காரணங்களுக்காக இந்த விடுமுறையை அவருக்கு வழங்குவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. (04)

## சம்பந்தனின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை அன்னாரது இல்லத்தில் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை 4 மணியளவில் அன்னாரது புகழுடல் தகனக்கிரியைக்காகத் திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (05)

## ஆசிரியர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலைக் கல்வியை சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது!, என தெரிவித்த ஜனாதிபதி, இது தொடர்பில் தேவையான மேலதிக நடவடிக்கைகளை ஆராயுமாறு சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்துமாறு சகலரையும் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, இந்த முறையற்ற செயல்களுக்கு ஆதரவளிக்க வேண்டாம் எனவும் எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் ஆசிரியர் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வுக்கான இணைய முறைமை தொடர்பில் கல்வி அமைச்சருடன் கலந்துரையாடியதாக தெரிவித்த ஜனாதிபதி, பதவி உயர்வு அல்லது ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் எவருக்கும் அநீதி இழைக்க இடமளிக்கப்பட மாட்டாது எனவும் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் - 3, பொது ஊழியர் வெற்றிடங்களுக்கு 60 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டதுடன் 1,706 பட்டதாரிகள் மற்றும் 453 ஆங்கில டிப்ளோமாதாரர்களுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (04)

# ரணிலுக்கு மொட்டு அழைப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் அங்கம் வகிப்பாராயின் அவரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்துவது குறித்து பரிசீலிக்கலாம் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நாங்கள் குறிப்பிட்ட ஒருவரை முன்வைக்கவில்லை. எந்த நேரத்திலும் சரியான நபரை முன்வைப்போம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவர் மொட்டுச் சின்னத்தில் முன்வைக்கப்படுவார். ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி எமது கட்சியின் உறுப்பினர் பதவியைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு நடந்தால் அவரை வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் நாங்கள் பரிசீலிப்போம்." - என்றார். (05)

# 67 ஆவது மாடியில் இருந்து குதித்து மாணவனும் மாணவியும் மரணம்!

## கொழும்பில் பரபரப்பு

கொழும்பு - கொம்பனி வீதியில் உள்ள பிரபல அடுக்குமாடி குடியிருப்பில் 67 ஆவது மாடியில் இருந்து 15 வயதான இரண்டு மாணவர்கள் கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

சர்வதேச பாடசாலையொன்றில் ஒரே வகுப்பில் கல்வி கற்கும் மாணவனும், மாணவியுமே உயிர்மாய்த்தனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

வெள்ளவத்தை மற்றும் களனி பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை நேரம் முடிந்ததும் குறித்த கட்டடத்தில் நடைபெற்ற விருந்தில் இருவரும் கலந்துகொண்டனர் என்றும், இந்த விருந்தில் சுமார் 100 மாணவர்கள் கலந்துகொண்டனர் என்றும், அதன்பின்னர் மேற்படி இரு மாணவர்களும் 67 ஆவது மாடியில் இருந்து குதித்தனர் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது. 3 ஆவது மாடியின் மேல் தளத்தில் இருந்து அவர்களின் சடலங்கள் கண்டுப்பிடிக்கப்பட்டன என்றும், அவர்களின் காலணிகள் 67 ஆவது மாடியில் இருந்து மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் கூறினர்.

நீதிவானின் கள விசாரணையையடுத்து சடலங்கள் பிரேத பரிசோதனைக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேற்படி மாணவனும் மாணவியும் தற்கொலை செய்தமைக்கான காரணம் இன்னமும் தெரியவரவில்லை. (05)

# உடுவில் சட்டத்தரணி அலுவலகத்தில் பொலிஸார் சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம் - உடுவில் பகுதியில் உள்ள பிரபல சட்டத்தரணியொருவரின் அலுவலகத்தில், பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இத்தாலியைச் சேர்ந்த பெண்ணொருவர், யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி விவாகரத்துக்கு விண்ணப்பிக்கச் சென்றபோது, அவர் ஏற்கனவே விவாகரத்துப் பெற்றுள்ளார் என்று தரவுகள் வெளிக்காட்டியுள்ளன. அந்தப் பெண் அதுவரை விவாகரத்துக்கு விண்ணப்பிக்காத நிலையில், இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணைகளில், உடுவில் பகுதியில் உள்ள சட்டத்தரணியொருவர் கனிஷ்ட சட்டத்தரணிகள் மூலமாக ஆள்மாறாட்டம் செய்து, மேற்படி தம்பதியர்கள் விவாகரத்துப் பெற்றுக்கொள்வதாக நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை தெரியவந்தது.

இதையடுத்து, இது தொடர்பில் குறித்த சட்டத்தரணியின் அலுவலகத்தில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் பொலிஸார் அனுமதி பெற்றதையடுத்தே இந்தச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (01)

## எட்டியாந்தோட்டை தீ விபத்தில் கணவனும் மனைவியும் சாவு

கேகாலை மாவட்டத்துக்குட்பட்ட எட்டியாந்தோட்டை, பனாவத்த தோட்டம் இலக்கம் - 02 பிரிவில் உள்ள லயன் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

இன்று அதிகாலை ஒரு மணியளவிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

60 வயதான கணவரும், 50 வயதான மனைவியுமே தீ விபத்தில் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

அத்துடன், லயன் குடியிருப்பில் உள்ள 5 வீடுகள் முற்றாக தீக்கிரையாகியுள்ளன. தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

## பதில் அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன்

*அமைச்சரவை அனுமதியுடன் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு பதில் அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன் பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*அதற்கான நியமனக் கடிதம் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் வழங்கி வைக்கப்பட்டது.* *(04)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



## மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்திற்கு ஒலிபரப்பு உபகரணங்கள் வழங்கி வைப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தின் ஆராதனை மண்டபத்திற்கான ஒலிபரப்பு கட்டமைப்பை உருவாக்க 2 இலட்சம் ஷரூபாய் பெறுமதியான உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலய அதிபர் எம்.எம். முஹம்மட் நியாஸ் தலைமையில் இன்று அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த இரண்டு இலட்சம் ஷரூபா நிதியினை இரத்தினபுரி மாவட்ட சட்டத்தரணிகள் சங்க தலைவரும் சப்ரகமுவ மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினரும் பலாங்கொடை மஜிஸ்ரேட் நீதிமன்ற பதில் நீதிபதியும் சப்ரகமுவ பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும், மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தின் பழைய மாணவருமான சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.எம். றபீக் அன்பளிப்பு செய்திருந்தார்.

இந்த உபகரணங்களை சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் எம்.எம்.றபீக் சார்பாக பழைய மாணவர் சங்க செயலாளரும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான எம்.என்.எம். வஸீம் பாடசாலை அதிபர் அவர்களிடம் கையளித்தார். இதில் பழைய மாணவர் சங்க உபதலைவரும் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினருமான நழீம் எம். பதுருத்தீன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் தாதி உத்தியோகத்தர் பி.எம்.நஸ்றுதீன், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தொழில் வழிகாட்டல் ஆலோசனைக் கருத்தரங்கு

(சர்ஜூன் லாபீர்)

பாடசாலையில் இருந்து இடைவிலக்கிய மாணவர்களை தொழிநுட்ப கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கு அனுமதிப்பதற்காக கிராம மட்டத்தில் கடமையாற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தி மாணவர்களை இணைத்து கொள்வது சம்மந்தமான கருத்தரங்கு இன்று சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. சம்மாந்துறை பிரதேச செய லாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கிணங்க திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எச்.எம்.எஸ்.ஐ.ஏ மௌலான மற்றும் மனதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம் நிப்ராஸ் ஆகியோரின் ஒருங்கினைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம வளவாளராக சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் எஸ்.தியாகராஜா கலந்து கொண்டு உத்தியோகத்தர்களுக்கு தொழிநுட்ப கல்லூரியின் செயற்பாடுகள் நன்மைகள் சம்மந்தமாக தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் நிந்தவூர் தொழிற்பயிற்சி நிலையத்தின் திட்ட உதவியாளர் எம்.எம் மஹ்ஜூன், சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம் கமல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.






## மிதி வெடி

"அண்ணன் எப்ப போவான் திண்ணை எப்ப காலியாகும்..." எண்டு ஒரு பழமொழி இருக்குது பாருங்கோ. அது மாதிரித் தான் தமிழ்த் தேசிய அரசியலும் இப்ப இருக்குது.

பெருந்தலைவர் சம்பந்தர் போய்ச் சேர்ந்திட்டார். அவற்றை நாடாளுமன்றக் கதிரைக்கு அடி, பிடி வருமெண்டு பாத்தா சட்டம் தெளிவா இருந்ததால கனடாக் காரர் - வாற அமர்வில இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆகப் போறார்.

இது இன்னொரு கனடாக்காரருக்கு இருப்புக் கொள்ளாது பாருங்கோ. என்ன தகிடுதித்தம் எல்லாம் பண்ணப்போறாரோ தெரியேல்ல.

சம்பந்தரிண்ட இடத்துக்கு இப்ப வரப்போறவரும், இந்த "கூல்"ஆன கனடாக் காரரும் முந்தி ஒண்டுக்குள்ள ஒண்டா இருந்தவையாம்.

இப்ப "எம்.பி" ஆகப் போற முருகபக்தர்தான் தமிழரசுக் கட்சியோட நெருக்கமான பின்னணி உள்ளவர். அவரைப் பிடிச்சு கட்சிக்குள்ள வந்த பிறகு இப்ப அவருக்கே ஆப்படிக்க வெளிக்கிட்டாராம் அந்தக் க(ல்)லாநிதி!

கட்சிக்குள்ள வந்து கட்சியை வைச்சுத்தான் காசு - பணம் பாக்க வேணும் எண்ட நோக்கத்தில, சிவனிட்டை நெத்திக்கு நேராக் கேள்வி கேட்ட புலவரின்ர பெயரில உள்ளவருக்குள்ளால "முருக" தாசனாருக்குள்ளல வந்து - அங்கத்த ஆக்களிட்ட காசு சேர்த்துப் போட்டு, இங்கால கிள்ளித் தெளிச்சிருக்கிறார் இந்தக் "கூலா"ன க(ல்)லாநிதி.

மிச்சம் மீதி எல்லாம் "பொக்கற்"றுக்குள்ள எண்டு கனடாவில கதைக்கினம்.

கட்சியும் எப்பவாவது - ஆருக்காவது கணக்குக் காட்டி இருக்குதே? "ஆத்தில வருகுது அண்ணை பிடி, தம்பி பிடி" எண்டு எல்லாரும் நல்லாப் போட்டுப் பிடிச சிருக்கினம். அங்க சேர்த்த காசுக்குக் கணக்கில்லை. இங்க வாங்கின காசுக்கும் கணக்கில்லை. "ஊரார் வீட்டு நெய்யே. என் பொண்டாட்டி கையே.." எண்டது போலத்தான் ஊரவன் காசில அவனவன் "பிஸினஸ்" நடந்திருக்கு!

கட்சித் தலைவரும் ஆர் காசோட வந்தாலும் "ஆ"வெண்டு கொண்டு கை நனைச்சுப் போடுவாராம். ஆரம்பத்தில "தாசனோட" வந்த க(ல்)லாநிதி நாளடைவில மரத்தால ஏறி, கொப்பால இறங்குமாப்போல புத்திரத்தோட ஐக்கியமாகிட்டாராம். பிறகென்ன புத்திரமும் "காணாததை" க் கண்டது போல எல்லாரையும் வெட்டி, கனடாக்காரக் க(ல்)லாநிதியை பெரிசா நினைச்சிருக்கிறார். காசு காய்க்கிற மரம் எண்டு நினைச்சிட்டார் போல.?

இப்ப இந்த மனுசன் சட்டத்தின்படி "எம்.பி" ஆகப் போகுது எண்டவுடன "கூல்" ஆன க(ல்)லாநிதி கொஞ்சம் சூடாகிக் கத்திறாராம்! பொறுங்கோ பாப்பம் என்ன நடக்கிதெண்டு.

உந்த "எம்.பி" கதையோட நான் சொல்ல வந்ததை மறந்துட்டன். சம்பந்தரைப் பற்றி இப்ப பந்தி பந்தியா முகப்புத்தகத்தில எழுதுறவைக்கு கடந்த காலத்தில நடந்ததுகள் ஏதும் தெரியுமே? நாங்களும், எங்கட வயசுக்காரரும் தான் "வாழும்" சாட்சியங்கள்.

சம்பந்தரை "வாழும் வீரர்" எண்டு பட்டமும் குடுத்துக் கொண்டாடினவை தானே? என்னைக் கேட்டா நான் சொல்லுவன் அந்தாள் ஒரு "வாழும் (வாழ்ந்த) விவேகன்"!

அரசியல்ல வேகத்தை விட, விவேகம் தான் பிரதானமுங்கோ. அந்தாள் தன்னட்டை வந்த ஒவ்வொரு பந்தையும் நிதானமா விளையாடினது. பொன்னம்பலத்தார் குடும்பத்தைப் போல எடுத்த எடுப்பில எல்லாப் பந்தையும் அடிச்சு விளையாடேல்ல. தன்ர "பிச்"ல அடிக்க வேண்டியதை அடிச்சு மறிக்க வேண்டியதை மறிச்சு விளையாடினது.

சங்கரியார் அவசரப்பட்டதால தானே ஐயா தலைவரா வந்தவர்..? சந்தர்ப்பத்துக்கேத்த மாதிரி பூந்து விளையாடிட்டார் அவ்வளவு தான்!

என்ன, தனக்குப் பிறகு ஆர் எண்டதைக் கை காட்டாமல் போய்ச் சேர்ந்திட்டார். ஏற்கனவே குத்துவெட்டுகளோட குறை உயிராக் கிடக்கிற கூட்டமைப்பு அவரோடயே போயிருமோ எண்டு தான் யோசிக்க வேண்டிக் கிடக்கு.

பெரும்பாலான தலைவர்மார் விடுற பிழை உது தான் பாருங்கோ தங்களுக்குப் பிறகு கட்சி எப்பாடு பட்டா எனக்கென்ன எண்ட மனநிலை.

கூட்டணி, காங்கிரஸ், தமிழரசு எண்டு பழம்பெருங் கட்சிகள் எல்லாமே அந்தரத்தில தான் தொங்கிக் கொண்டிருக்கு.

சம்பந்தருக்கு ஏலாமல் வரேக்க "ஏலாட்டி விட்டுட்டு போக வேண்டியது தானே - அடுத்தவைக்கு வழி விடலாம் தானே?" எண்டவையின்ர தலைவரும் இயலாமல் தான் இருக்கிறாராம். அவருக்கும் இப்ப மூண்டு மாசம் விடுமுறை குடுத்திருக்கினம்.

அவர் விடுமுறை எடுக்க முன்னமே, அவர் "போனால்" அந்தக் கதிரை ஆருக்கெண்டு இங்க பலதரப்பட்ட "டீல்"!

கங்காரு நாட்டுக்குப் போன தலைவர் இனி இங்கால வரமாட்டாராம் எண்டு அடுத்த கதிரையை - வாக்கெடுத்து வரிசையில இருக்கிறவருக்குப் போக விட்டுடக்கூடாது எண்டு, தேசியப் பட்டியல் "எம்.பி" இராஜினாமா செய்யுற அளவுக்குப் போயிட்டுதாம்..!

தலைவர் என்னெண்டா கட்சி குடும்பத்தை விட்டு வெளியால போயிடக் கூடாது எண்டு "அம்மாப்" பிள்ளையா இருக்க, கட்சிக் காரரெல்லாம் "எனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேணும்" எண்டு நிக்கினம்.

கட்சித் தலைவர் சுகவீனம் எண்டு சொல்லிக்கொண்டு கதிரையைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டிராமல் "மானஸ்தன்" போல பதவியை விட்டுட்டு இறங்கினால் என்ன, வேற எப்படியாவது அந்த இடம் வெற்றிடம் ஆகினால் என்ன?, சட்டப்படி "மணி" கேக்கும் தானே? ஏன் அந்தரப்படுறியள்? பொறுத்திருந்து பாப்பம்!

நரமுனி

# நாட்டில் இடம்பெறுகின்ற விபத்துக்களால் நாளொன்றிற்கு 32-35 பேர் உயிரிழப்பு!

## விசேட வைத்திய நிபுணர் சமித சிரிதுங்க



இலங்கையில் ஒவ்வொரு 3 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை 4 பேர் விபத்துக்களால் உயிரிழக்கின்றனர் என்றும், நாட்டில் இடம்பெறுகின்ற விபத்துக்களால் நாளொன்றிற்கு 32-35 பேர் உயிரிழக்கின்றனர் என்றும் சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சமித சிரிதுங்க தெரிவித்தார்.

9 ஆவது தேசிய விபத்து தடுப்பு வாரத்தை முன்னிட்டு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விழிப் புணர்வு ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்று கையில்,

ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் ஆரம்பத்தின் முதலாவது திங்கட்கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை தேசிய விபத்து தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது. அதற்கமைய இந்த வருடத்திற்கான 9 வது தேசிய விபத்து தடுப்பு வாரம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது என்று தெரிவித்தார்.

இலங்கையின் அரச வைத்திய சாலைகளுக்கு உள்நோயாளிகளாக சிகிச்சை பெற வருபவர்களில் பெரும் பாலானோர் விபத்துகளுக்கு உள்ளாகி வருபவர்கள் என்று கூறிய விசேட வைத்திய நிபுணர், வருடத்திற்கு ஏறக்குறைய ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இவ்வாறு சிகிச்சை பெற வருவதாகவும், மேலும் பலர் வெளி நோயாளர் பிரிவுகளிலும், தனியார் வைத்தியசாலைகளிலும் சிகிச்சை பெறுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பெரும்பாலும் 15-44 வயதுக்குட்பட்டவர்கள் நோய்வாய்ப்படுதல் அல்லது மரணிப்பதற்கான பிரதான காரணம் விபத்துக்களே என்றும் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார். இந்த விபத்துக்கள் காரணமாக அரசாங்க வைத்தியசாலைகள் மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பல பில்லியன்களை செலவிடுகின்றன..

மேலும் அதிகளவிலான வாகன விபத்துக்கள் ஏற்பட்டாலும், விழுதல், நீரில் மூழ்குதல், தீக்காயங்கள், விலங்குகள் கடித்தல், பாம்புக்கடி போன்ற விபத்துக்களும் பதிவாகின்றன. விபத்துக்கள் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் அல்லது வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுபவர்களில் 50% க்கும் அதிகமானோர் வீடுகளில் விபத்துக்களில் உள்ளானவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர, 25% வீதி விபத்துகள் பதிவாகி வருவதாகவும், 10 வீத விபத்துகள் பணியிடங்களில் இடம்பெறுவதாகவும் குறிப்பிட்ட மருத்துவர், விபத்து தடுப்பு வாரத்தின் 5 நாட்களில், ஒவ்வொரு அம்சம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றார் .

அத்துடன், விபத்துக்களை குறைக்கும் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதே இந்த வருடத்தின் 9 ஆவது தேசிய விபத்து தடுப்பு வாரத்தின் நோக்கமாகும் என்று விசேட வைத்திய நிபுணர் சமித சிரிதுங்க வலியுறுத்தினார். (04)

# பானி பூரியில் உடலுக்குக் கேடு விளைவிக்கும் இரசாயனங்கள் தடைசெய்யுமாறு கர்நாடக மாநில சுகாதாரத்துறை கோரிக்கை



இந்தியாவின் கர்நாடக மாநில சுகாதாரத்துறையினரால் மாநிலம் முழுவதிலும் உள்ள 250 பானி பூரி மாதிரிகள் பெறப்பட்டு நடாத்திய பரிசோதனையில் 40 மாதிரிகளில் புற்றுநோயை உண்டாக்கும் காரணிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆய்வில் டர்ராஸின் போன்ற உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கோலி பிளவரை வைத்து செய்யப்படும் கோபி மஞ்சூரியன் மற்றும் சிக்கன் கபாப் போன்ற பிற தின்பண்டங்களில் இதுபோன்ற காரணிகள் இருந்ததால் அவற்றை பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டதை போல் பானிபூரியிலும் புற்றுநோய் நிறமூட்டும் காரணிகள் இருப்பதால் கர்நாடக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாநில சுகாதார அமைச்சகம் கேட்டுகொண்டுள்ளது.


இதனைத் தொடர்ந்து கர்நாடக சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ் முழுமையான பரிசோதனை அறிக்கை கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

அதே நேரத்தில் பொதுமக்கள் தங்கள் உடல் நலனில் தனி அக்கறை எடுத்து உடல் நலத்தை பாதிக்கும் உணவுப் பொருட்களை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும் எனவும் தூய்மை மற்றும் சுகாதாரத்திற்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பலர் விரும்பி உண்ணும் பிரபலமான வட இந்திய உணவான பானிபூரியில் புற்றுநோயை உண்டாக்கும் பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால் பானிபூரியை விரும்பி உண்ணும் நபர்களுக்கு கவலையை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த மாதத் தொடக்கத்தில் பஞ்சு மிட்டாய், கோபி மஞ்சூரியன், கபாப் தயாரிப்பில் செயற்கை வண்ணங்கள் பயன்படுத்த இந்தியாவில் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (04)

# இதுவே எனது கடைசி யூரோ கிண்ணக்காற்பந்துத் தொடர்! உறுதிப்படுத்தினார் கிறிஸ்டியானோ ரொனால்டோ



நடப்பு ஐரோப்பிய சம்பியன்ஷிப் காற்பந்துத் தொடரே தனது கடைசி யூரோ கிண்ணக் காற்பந்துத் தொடர் என போர்ச்சுக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற போட்டியின் போதே அவர் குறித்த அறிவிப்பினை அவர் வெளியிட்டுள்ளார்.

ஜேர்மனியில் தற்போது நடைபெற்றுவரும் யூரோ கிண்ண காற்பந்து தொடரில் போர்ச்சுக்கல் அணி ஸ்லோவேனியாவை பெனால்டி ஷூட்அவுட் முறையில் வெற்றிபெற்று கால் இறுதிச் சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளது.

கால் இறுதிப் போட்டியில் மிகவும் பலம்வாய்ந்த பிரான்ஸ் அணியை போர்ச்சுக்கல் அணி எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி எதிர்வரும் ஆறாம் திகதி இடம்பெறவுள்ளது.

(04)



# பிரான்ஸ் அரசியலில் ஏற்படப்போகும் மாற்றம்? முதல்கட்டத் தேர்தலில் வலதுசாரிகள் முன்னணி

பிரான்ஸ் நாடாளுமன்றத்துக்கு நடைபெற்ற முதல்கட்ட தேர்தலில் தீவிர வலதுசாரிக் கட்சியான 'தேசியப் பேரணி' முன்னிலை பெற்றுள்ளது. அதையடுத்து, அந்தக் கட்சி ஆட்சிமைப்பதைத் தடுப்பதற்காக வலதுசாரி மற்றும் மிதவாதக் கட்சிகள் தங்களுக்குள் கூட்டணி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. ஐரோப்பிய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் கடந்த மாதம் 6 முதல் 9 ஆம் திகதி வரை நடைபெற்றது. இதில், தீவிர வலதுசாரி கட்சிகள் அதிக இடங்களைக் கைப்பற்றின.

பிரான்ஸிலுள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலிலும், அகதிகள் குடியேற்றத்தைக் கடுமையாக எதிர்த்து வரும் தீவிர வலதுசாரி கட்சியான தேசியவாத பேரணி கட்சி அதிக வாக்குகளைப் பெற்றது. அதிபர் மேக்ரானின் தலைமையிலான மறுமலர்ச்சி கட்சி மிகப் பெரிய வித்தியாசத்தில் 2 ஆவது இடத்துக்கு வந்தது.

அதையடுத்து, மக்களிடையே தங்களுக்கான ஆதரவை நிஷரூபிப்பதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு புதிய தேர்தலை முன்கூட்டியே நடத்துவதாக மக்ரோன் அறிவித்தார்.

ஜூன் 30 ஆம் திகயும் ஜூலை 7 ஆம் திகயும் இரு கட்டங்களாக அந்தத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இது, இமானுவல் மக்ரோனின் அரசியல் சூதாட்டம் என்று அப்போதே கூறப்பட்டது. தேர்தலில் மக்ரோனின் மறுமலர்ச்சி கட்சி தற்போதுள்ள இடங்களையும் இழக்கக்கூடும் என்று அரசியல் நோக்கர்கள் கூறினர்.

அதை மெய்ப்பிக்கும் வகையில், ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 30) நடைபெற்ற முதல்கட்ட தேர்தலில் தேசிய பேரணி கட்சி முன்னிலை பெற்றது. அந்தக் கட்சி தலைமையிலான வலதுசாரி கூட்டணிக்கு 33 சதவீத வாக்குகள் கிடைத்தன. 28 சதவீத வாக்குகளுடன் இடதுசாரி கூட்டணியான புதிய மக்கள் முன்னணி 2 ஆம் இடத்தைப் பிடித்தது.

அதிபர் இமானுவல் மக்ரோனின் மையவாதக் கூட்டணிக்கு 20 சதவீத வாக்குகள் மட்டுமே கிடைத்தன. 577 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை தொகுதிகள் எந்தக் கட்சிக்குக் கிடைக்கும் என்பது வரும் 7 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இறுதிக்கட்டத் தேர்தலில் தெரிந்துவிடும்.

இப்போதைய நிலையில் தேசியப் பேரணி தலைமையிலான வலதுசாரி கூட்டணியே ஆட்சியமைக்கும் சூழல் உள்ளதாகக் கூறப்படுகிறது. இனவெறி, வெளிநாட்டினர் மீதான வெறுப்பு ஆகியவற்றுக்கு பெயர் பெற்ற அந்தக் கட்சி பிரான்ஸில் ஆட்சியமைத்தால் அது ஐரோப்பிய அளவிலும் சர்வதேச அளவிலும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. எனவே, அந்தக் கட்சிக் கூட்டணி ஆட்சியமைப்பதைத் தடுப்பதற்காக இடதுசாரி மற்றும் மையவாதக் கட்சிகள் கூட்டணிப் பேச்சுவார்த்தையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களில், குறிப்பிட்ட தொகுதிகளில் வாக்குகள் பிரிந்து தேசியப் பேரணி கட்சி வெற்றி பெறுவதைத் தவிர்ப்பதற்காக இடதுசாரிக் கட்சிகளும் மிதவாத கட்சிகளும் பரஸ்பரம் வேட்பாளர்களைத் திரும்பப் பெறும் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

அந்த வகையில், இரண்டாம் கட்டத் தேர்தலிலும் தேசியப் பேரணி கட்சிக்கு எதிராக அதிக வெற்றி வாய்ப்புள்ள வேட்பாளருக்காக இடதுசாரி மற்றும் மையவாதக் கட்சிகள் தொகுதிகளை விட்டுத்தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(04)

# செய்னப் பாடசாலையில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் அணிவித்தலும் இலவச குடிநீர் திட்டமும்




(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் செய்னப் பெண்கள் ஆரம்ப பாடசாலையில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாணவர் தலைவர்களுக்கான சின்னம் அணிவித்தல் மற்றும் இலவச குடிநீர் திட்டம் அங்குரார்ப்பணம் என்பன நேற்று செவ்வாய்க்கிழமை (02) பாடசாலையின் அதிபர் எச்.யூ.எம்.எஹியா தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை பழைய மாணவர் அமைப்பான பல்ஸ்ட் அமைப்பை சேர்ந்த எஸ்.எம். முஹம்மத் மபாஸ் மற்றும் எம்.டீ. றினாஸ் முஹம்மத், பாடசாலை நிகழ்வுகளின் அறிவிப்பு துறைக்கு பங்களிப்பு நல்கி வரும் எம்.ஆர்.எம்.ஷவ்வாப், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் செயலாளர் முஹம்மது நளீம் உள்ளிட்ட பிரதி அதிபர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

பல்ஸ்ட் அமைப்பினால் கடந்த ஆறு வருடங்களாக தேவைப்படுவோருக்கு உணவு என்ற செயற்திட்டம் மூலம் செய்னப் பெண்கள் ஆரம்ப பாடசாலையின் தேவையுடைய மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான செலவீனங்கள் முழுவதும் பல்ஸ்ட் அமைப்பை சேர்ந்த நண்பர்களால் இறை திருப்தியை நோக்காகக் கொண்டு வழங்கப்படும் நன்கொடைகளாகும்.

இவ்வருடத்துக்கான சிரேஷ்ட மாணவ தலைவியாக எம்.என்.அய்தா செய்ன் தெரிவு செய்யப்பட்டதோடு, 6 உப சிரேஷ்ட மாணவ தலைவர்களோடு மொத்தமாக 40 மாணவ தலைவர்கள் இதன் போது அதிபர் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொடண்டனர். இவர்களுக்கான பதக்கங்களும் அதிதிகளினால் அணிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சமகாலத்தில் பாடசாலையில் புதிதாக பொருத்தப்பட்டுள்ள இரு நீர்த் தாங்கிகளிலிருந்து நீர் விநியோக திட்டமும் அதிதிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புத்தளம் நகரில் சமூக சேவையாற்றிய காலஞ்சென்ற கிராம உத்தியோகத்தர் ஹசன் அவர்களது உறவினர்களால் ஒரு நீர் தாங்கியும், மாணவர் தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெற்றோர்களினால் மற்றுமோரு நீர் தாங்கியும் பாடசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நீர்கொழும்பு ஓரியண்ட் லயன்ஸ் கழகத்தின் தலைவராக கலாநிதி ஹிரான் பீட்டர் தெரிவு

(ஹஸ்பர் ஏ.எச்)

நீர்கொழும்பு ஒரியண்ட் லயன்ஸ் கழகத்தின் 2024-2025 ஆம் ஆண்டுக்கான கௌரவ தலைவராக பிரபல சமூக செயற்பாட்டாளர் கலாநிதி ஹிரான் பீட்டர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி கட்டுநாயக்க தனியார் விடுதியில் நடைபெற்ற நிகழ்வில் தலைவர் பதவி இவருக்கு உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டது.

இளம் பராயம் தொடக்கம் சமூக செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திய இவர் லயன்ஸ் கழகத்தில் இணைந்து செயற்பட்டதுடன் மிக குறுகிய காலத்தில் இப்பதவியை இளம்பராயத்தில் பெற்றுக்கொண்டமை விசேட அம்சமாகும்.

முன்னணி தனியார் நிறுவனத்தின் அதிபதியாக செயற்படும் இவருக்கு நாட்டின் முன்னணி தரப்படுத்தல் மதிப்பீட்டு நிறுவனத்தினால் சமூக சேவை தூதுவர் என்ற பட்டம் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்டுள்ளமையானது இவரது



சமூக சேவையை பறைசாற்றுவதாக அமைகின்றது.

இவ்விருது சமூக சேவையில் உயரிய பங்களிப்பு செய்யும் தனிநபர்களுக்கு வழங்கப்படுவதாக அமையப்பெறுகின்றமை குறிபப்பிடத்தக்கது.

கலாநிதி ஹிரான் பீட்டர் பாடசாலைகளில் பத்தாயிரம் மரங்களை நடுதல் வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்துள்ளார். அதடிப்படையில் இம்மாதம் ஹொரனை மற்றும் பன்வில ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு மர நடுகை செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இத்திட்டம் நாடளாவிய ரீதயில் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் கல்விப்பொதுத்தராதர உயர்தர வணிகப்பிரிவு மாணவர்களின் நலன் கருதி இலவச நிகழ்நிலை வகுப்புக்களையும் விரைவில் ஆரம்பிக்கவுள்ளார்.

இதன்மூலம் கஸ்டப்பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இது ஒரு வரமாக அமைந்துள்ளது. தாம் முன்னெடுக்கும் சமூக சேவையை மேலும் வலுப்படுத்த தமக்கு கிடைக்கப்பெற்ற லயன்ஸ் கழக தலைவர் பதவி ஏதுவாக அமையுமென்றும் அனைவரது ஒத்துழைப்பையும் தாம் எதிர்பார்ப்பதாக கலாநிதி ஹிரான் பீட்டர் தெரிவித்துள்ளார்.




# மாளிகைக்காடு அல்-ஹுஸைன் வித்தியாலயத்தின் தற்காலிக அதிபர் பொறுப்பதிபராக கடமையேற்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மாளிகைக்காடு கமு.கமு. அல்-ஹுஸைன் வித்தியாலயத்தில் தற்காலிகமாகக் கடமையாற்றிவந்த அதிபர் ஏ.சீ.எம் நளீம் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் உத்தியோகபூர்வமாக பாடசாலையின் பொறுப்பதிபராகக் கடமையேற்றார்.

கடந்த மே மாதம் 31 அன்று கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்ற நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்ட இவர், நியமனக் கடிதத்தினை, ஜ/ன் 31 அன்று கல்முனை வலயக்கல்வி அலுவலக வலயக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் முன்னிலையில் பெற்றுக்கொண்டார். கடந்த திங்கட்கிழமை (01) உத்தியோகபூர்வமாக தமது கடமையினை பிரதிக் கல்விப்பணிப்பாளர் எம்.எச்.எம் ஜாபீர்,கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ .சஞ்சீவன், எப்சி இணைப்பாளர் ஏ.எல்.எம் ஆரிஃப், உதவிக் கல்விப்பணிப்பாளர் ஜஹாங்கீர் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி. ரிஸ்லியா உவைஸ், பாடசாலையின் அபிவிருத்திக்குழு செயலாளர் கே.ஜெளபர், பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் தாணீஸ் ரஹ்மத் துல்லாஹ், பாடசாலையின் ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் பாடசாலையின் நலன் விரும்பிகள் முன்னிலையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி டயகம கிழக்கு தோட்ட மக்கள் போராட்டம்

நுவரெலியா மாவட்டம், அக்கரப்பத்தனை பிரதேச சபைக்குட்பட்ட டயகம பிரதேசத்தில் சுமார் 6 ஆயிரம் குடும்பங்கள் தினமும் பாவிக்கும் 7 கிலோமீற்றர் பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரி டயகம கிழக்கு தோட்ட மக்கள் இன்று காலை வீதிக்கு இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் டயகம கிழக்கு தோட்ட தொழிற்சாலைக்குச் செல்லும் வழியில் முன்னெடுக்கப்பட்டது.






இதில் கலந்துகொண்ட தோட்ட மக்கள், எதிர்பார்ப்புகள், எதிர்ப்புகள், கோரிக்கைகள் அடங்கிய சுலோகங்களை ஏந்தி கோஷங்களை ஒலிக்கச் செய்து நடைபவனியாக வருகை தந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மிக நீண்டகாலமாக டயகம நகரில் இருந்து டயகம கிழக்கு தோட்டம் வரை மக்கள் பயணிக்கும் ஏழு கிலோமீற்றர் தூரமான வீதி பாவனைக்கு அறுகதையற்ற நிலையில் குன்றும் குழியுமாகச் சீர்கெட்டு காணப்படுகின்றது.

ஒவ்வொறு தேர்தல் காலத்திலும் இந்தப் பகுதிக்கு வாக்குக் கேட்டு சொகுசு வாகனங்களில் படையெடுத்து வரும் அரசியல் தலைவர்கள், இந்த வீதியைச் செப்பனிட்டுத் தருவதாக மக்கள் பார்வைக்குக் கற்களைக் குவித்து அடிக்கல் நாட்டிச் செல்கின்றனர்.

ஆனால், தேர்தலில் எமது வாக்குகளைப் பெற்ற பின் எம்மையும், எமது வீதியின் அபிவிருத்தியையும் மறுபடி ஒரு தேர்தல் வரும் வரை அந்த அரசியல் தலைவர்கள் மறந்து விடுகின்றனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தமது ஆதங்கத்தை வெளிக்காட்டினர்.

டயகம கிழக்கு தோட்டம் வரை பத்து தோட்டங்களைச் சேர்ந்த 6 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த அதிக மக்கள் வசிக்கும் பாரிய பிரதேசமாகும். இவர்கள் டயகம நகருக்கு வருகை தர பழுதடைந்த ஏழு கிலோமீற்றர் தூரப் பாதையைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இந்தநிலையில், பாடசாலைகள், வைத்தியசாலை, தொழிற்சாலை, பிரதான நகருக்குச் செல்லும் போக்குவரத்து, விவசாய நடவடிக்கை உள்ளிட்ட பயன்பாடுகள் மேற்கொள்ள மக்கள் இந்த வீதியை மாற்று வழியின்றி பயன்படுத்துகின்றனர்.

எனவே, இந்த வீதியின் சீர்கேடு தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று எந்த அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் மறுப்புத் தெரிவிக்க முடியாது.

ஆகையால் இம்முறையும் இந்த வீதி ஊடாகவே தேர்தலுக்கு வாக்குக் கேட்க அரசியல்வாதிகள் வரவேண்டும். இந்தநிலையில், "முதலில் றோட்டைப் போடு, பிறகு வோட்டைக் கேளு" என்ற பிரதான கோரிக்கையை நாம் முன்வைக்கின்றோம்.

எனவே, டயகம கிழக்கு தோட்ட மக்களின் ஆதங்கத்தை உணர்ந்து இந்த வீதி ஊடாகப் பயணிக்கும் பாடசாலை மாணவர்கள் உள்ளடங்களாக பொதுமக்களின் நன்மை கருதி வீதியைச் செப்பனிட காலம் தாழ்த்தாது அரசியல்வாதிகள், அரச திணைக்களங்கள், அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்து போராட்டத்தில் இருந்து கலைந்து சென்றனர். (05)







## அரச சேவை நிறைவேற்று அதிகாரிகளின் விசேட கொடுப்பனவு 25,000 ஆக அதிகரிப்பு

### பொது நிர்வாக அமைச்சு தெரிவிப்பு

அரச சேவையில் கடமையாற்றும் நிறைவேற்று அதிகாரிகளுக்கு வழங்கப்படும் விசேட மாதாந்த கொடுப்பனவு 25,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் (ஜூலை) முதலாம் திகதி முதல் இது அமுலுக்கு வருகின்றது என பொது நிர்வா அமைச்சு தெரிவித்துள்ளது.

அரச நிறைவேற்று அதிகாரிகளுக்கு இதுவரை அவர்களின் சேவைக்காலத்தின் அடிப்படையில் விசேட மாதாந்த கொடுப்பனவு 15,000 முதல் 20,000 ஷரூபா வரையில் வழங்கப்பட்டு வந்ததாகவும், இம்முறை அத்தொகை 25,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும், இம்முறை சேவைக் காலம் கவனத்திற் கொள்ளப்படாமல் அனைத்து நிறைவேற்று அதிகாரிகளுக்கும் கொடுப்பனவு வழங்கப்படுவதாகவும், இதன்படி, இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், இலங்கை பொறியியல் சேவை அதிகாரிகள் மற்றும் இலங்கை கட்டடக்கலை சேவை அதிகாரிகள் ஆகியோர் மேற்படி விசேட கொடுப்பனவுக்கு உரித்துடையவர்கள் எனவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(ரெஜ-05)






# இசிப்பத்தன கல்லூரிக்கு விளையாட்டு மைதானம்!

கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான ஹென்றி பெட்ரிஸ் விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரிக்கு ஒப்படைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஹென்றி பெட்ரிஸ் விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரிக்குஒப்படைப்பதன்மூலம்அதனை சரியான வகையில் மேம்படுத்திப் பேணிச்செல்வதுடன், அதன்மூலம் குறித்த கல்லூரி மற்றும் ஏனைய சுற்றியுள்ள பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் மற்றும் அப்பிரதேசத்திலுள்ள மக்கள் தமது விளையாட்டுக்களுக்குப்பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிட்டுகின்றது.

இது தொடர்பாக கடந்த திங்களன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பல்வேறு திறமைகளை வெளிப்படுத்துகின்ற பல விளையாட்டு வீரர்களைக் கொண்டுள்ள இசிப்பத்தன கல்லூரிக்கு விளையாட்டுப் பயிற்சிகளுக்காக நிரந்தர விளையாட்டு மைதானம் இன்மையால், விளையாட்டுக்களில் ஈடுபடுகின்ற விளையாட்டு வீரர்கள் தமது திறமைகளை விருத்தி செய்வதில் தடைகள் காணப்படுகின்றன.

அதனால், கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமான ஹென்றி பெட்ரிஸ் (விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரியின் விளையாட்டு செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்காக இருதரப்பினர்களுக்கிடையே ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த ஒப்பந்தத்தின் காலப்பகுதி 2017 ஆம் ஆண்டில் முடிவடைந்துள்ளது.

ஹென்றி பெட்ரிஸ் விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரிக்குஒப்படைப்பதன்மூலம்அதனை சரியான வகையில் மேம்படுத்திப் பேணிச்செல்வதுடன், அதன்மூலம் குறித்த கல்லூரி மற்றும் ஏனைய சுற்றியுள்ள பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் மற்றும் அப்பிரதேசத்திலுள்ள மக்கள் தமது விளையாட்டுக்களுக்குப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும் வாய்ப்புக் கிட்டுகின்றது.

அதற்கமைய, ஹென்றி பெட்ரிஸ் விளையாட்டு மைதானத்தை அப்பெயரிலேயே பேணிக்கொண்டு, குறித்த விளையாட்டு மைதானத்தை இசிப்பத்தன கல்லூரிக்கு ஒப்படைப்பதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(04)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!